சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

வாரப்பாடசாலை

செயலட்டை - 04

பாடம்:-பொருளியல்

வாரம் - 05

தரம் -12

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி 05 :- பேரின பொருளாதார செயற்பாட்டை கவனத்திற்கொண்டு தேசிய கணக்குகளை தயாரிக்கும் ஆயத்தத்தை வெளிக் காட்டுவார்.**

**தேர்ச்சி 5.3 :- உற்பத்தி அணுகுமுறையின் அடிப்படையில் தேசிய கணக்கீட்டை தயாரிப்பதற்கு ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.**

## உற்பத்தி அணுகுமுறையிலான தேசிய கணக்கீடு

**குறித்த ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தி காரணிகளை கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து இறுதி ப் பொருட்கள் சேவைகளினதும் பணரீதியிலான பெறுமதியினை அல்லது அவற்றின் மொத்த கூட்டப்பட்ட பெறுமதியி னை கணிப்பீடு செய்தலே உற்பத்தி அணுகுமுறையிலான தேசிய கணக்கீடு ஆகும்.**

**பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. பல்கணிப்பீட்டு பிரச்சினை என்றால் என்ன? விளக்குக.
2. உற்பத்தி அணுகுமுறையிலான தேசிய கணக்கீட்டில் பல்கணிப்பீட்டு பிரச்சினையினை தவிர்க்கக் கூடிய வழிமுறைகள் யாவை?
3. மொத்த சேர்க்கப்பட்ட பெறுமதி என்றால் என்ன? விளக்குக.
4. மொத்த வெளியீட்டுப் பெறுமதி என்றால் என்ன?
5. இடைநிலை நுகர்வு என்றால் என்ன?